# அவாந்தரவெளி

**அவர் அவாந்தரவெளியைத் தண்ணீர்த் தடாகமாகவும், வறண்ட நிலத்தை நீரூற்றுகளாகவும் மாற்றி (சங் 107:35)**




நம்முடைய வாழ்க்கை பயணத்தில் அவாந்தவெளியைப் போன்ற சில பாதைகளை நாம் கடந்து போக வேண்டியிருக்கிறது. நம்முடைய அத்தியாவசிய தேவைகள் கூட சந்திக்க படமுடியாத சூழ்நிலைகளை நாம் கடந்துபோகிறோம். எந்த வகையிலும் ஆதரவோ, ஆறுதலோ, நம்பிக்கையோ இல்லாத சூழ்நிலையில் தனித்து விடப்பட்ட அவாந்தர பாதையில் நாம் பயணிக்க நேரிடுகிறது. கண்ணிற்க்கு எட்டிய தூரம் வரையில் எந்த உதவியும் இருப்பதாக தெரிவதில்லை.

இந்த அவாந்தவெளி பயணம் இன்னும் எவ்வளவுகாலம் தொடரும் என்றும் நம்மால் அறிந்துகொள்ளமுடியவில்லை. சில நேரங்களில் இந்த அவாந்தர பயணத்தில் நம்மோடு, நமக்கு பிரியமானவர்களும் சேர்ந்து பயணிக்கும்பொழுது அவர்கள் படுகிற துன்பமும் நமக்கு வேதனையை உண்டாக்குகிறது. நம்மையும் காப்பாற்ற முடியாமல், நம்மை சேர்ந்தவர்களையும் காப்பாற்ற முடியாமல் நாம் தவிக்கிறோம். இதன் உச்சகட்டமாக, இனி எந்த திசையில் பயணிப்பது என்றும், அடுத்து என்ன செய்வது என்றும் தெரியாமல் நாம் நிற்கின்ற இடத்தில் அப்படியே திகைத்து நிற்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் தவிக்கும் பொழுது, தேவனே நான் என்ன செய்வது என்று அவரை நோக்கி கூப்பிடும் பொழுது, தேவன் ஒரு அற்புதமான காரியத்தை செய்கிறார்.

நாம் அவாந்தர பாதையாய் எந்த சூழ்நிலையை நினைக்கிறோமோ, அதிலிருந்து நம்மை வெளியே கொண்டு வராமல், அந்த அவாந்தரவெளியையே தண்ணீர்த் தடாகமாக அவர் மாற்றி விடுகிறார். எந்த இடத்தில் இருப்பது நமக்கு வேதனையை கொடுத்ததோ அந்த இடத்தையே ஆசிர்வாதமான ஒன்றாக தேவன் மாற்றி போடுகிறார். எந்த காரியத்தை குறித்து நாம் வேதனைப்பட்டு கலங்கினோமோ அதையே நமக்கு ஆசிர்வாதமாக தேவன் மாற்றிபோடுகிறார். எந்த இடத்தில் நாம் தலை கவிழ்ந்து நின்றோமோ, இரக்கத்திற்க்காக கெஞ்சினோமோ அதே இடத்தில் நாம் தலை நிமிர்ந்து நிற்கும்படியாய், பிறருக்கு இரக்கம் பாராட்டும் படியாய் தேவன் சூழ்நிலைகளை மாற்றி போடுகிறார்.

எந்த வியாதிபடுக்கை நம்மை நிலைகுலைய செய்ததோ, அதே வியாதிபடுக்கையிலிருந்து நம்மை விடுவித்து ஜீவனுள்ள சாட்சிகளாய் நிறுத்துகிறார். மோசேயின் வாழ்வில் இதுவே நடந்தது. எந்த பார்வோன் மோசேயை கொல்ல நினைத்தானோ, அதே பார்வோன் அரண்மனையில் மோசே வளரும்படியாய் தேவன் கிரியை செய்தார். எந்த எகிப்திற்கு யோசேப்பு அடிமையாய் விற்கப்பட்டு போனானோ, எந்த எகிப்தில் அநியாயமாய் குற்றம் சாட்டப்பட்டு சிறையில் தவித்தானோ, எல்லாராலும் மறக்கப்பட்டு அவாந்தவெளி போல தன் நாட்களை கடத்திக்கொண்டு இருந்தானோ, அதே எகிப்தில் அவன் உயர்த்தப்பட்டான். காரணம் கர்த்தர் யோசேப்போடே இருந்தார்.

இன்றும் இப்படிப்பட்ட பாதைகளில் கடந்து செல்லும் நமக்கும் இருக்கும் ஒரே நம்பிக்கை அவாந்தரவெளியை போன்ற சூழ்நிலையாக இருந்தாலும், கர்த்தர் நம்மோடிருக்கிறார். எனவே அவாந்தவெளியில் இருந்து வேறொரு இடத்திற்கு மாற்றாமல், அவாந்தரவெளியையே தேவன் தண்ணீர்த்தடாகமாக மாற்றி போடுகிறார். எனவே தேவனை சார்ந்து வாழ்க்கையில் பயணிக்கும் நாம், கடந்த செல்கின்ற பாதை எதுவானாலும், அதன் எல்லாவற்றின் மத்தியிலும் தேவன் நம்மோடிருக்கிறார் என்ற நிச்சயம் மட்டும் நமக்கு இருந்தால் அது போதும். தேவன் ஏற்ற காலத்தில் நிச்சயமாக அதை ஆசிர்வாதமாக மாற்றி போடுவார். **“அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்” (ரோ 8:28).** ஆமென் அல்லேலூயா.